மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.
முன்னிலை:– திருமதி.P. கோபால அரசி, B.Sc.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.
2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை.
அ.வ.எண்.37/2021.
CNR No.TNTT100000392021.

1. நகோமி ஜெபதங்கம்
2. இந்திராதேவி சுசிலா
3. டெர்லின் ஸ்டெல்லா
4. ஜோதிபாய் ஜெயகுமாரி
5. ஆரீஸ் ராஜசிங்
6. ரஞ்சனி ஜீவரத்தினம்
7. எமர்சன் கோயில்சிங் .. வாதிகள்

/எதிர்/

1. எமி அம்மாள் (இறப்பு)
2. கஸ்தூரி
3. குளோரி
4. ரெஜினா
5. கோயில்பிள்ளை
6. சுதா
7. ஜெயசிங்
8. ஏஞ்சல்சிங்
9. ஜாக்குலின்
10. பிரீடா என்ற ஹேர்லின் பிரீடா
11. பிளசிங்
12. ஜாண்சிங்
13. சுந்தரலிங்கம்
14. யோவான் ராஜ்குமார் .. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 30.03.2021 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று விசாரணைக்காக என் முன்பு கொண்டு வரப்பட்டு, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.K. வேணுகோபால்

அவர்களும், 8, 9, 11 மற்றும் 13 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.R. அமல்ராஜ்குமார் அவர்களும் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி இறந்து விட்ட நிலையிலும், 16.08.2022 அன்று 14ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையானது அவர் இறந்து விட்டதாக திரும்ப வரப்பெற்றும், 2 முதல் 7 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரில்லாததால் அவர்கள் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டிருந்தும், 27.02.2023 அன்று 14ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லாமையாலும், நாளிதழ் பிரசுரம் மூலம் அவர் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், 15.03.2023 அன்று 10 மற்றும் 12 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரில்லாமையாலும், நாளிதழ் பிரசுரம் மூலம் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டிருந்தும், 16.02.2024 முதல், விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்த இவ்வழக்கானது, 25.06.2024 ஆகிய இன்று விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தும், ஏற்கனவே பல வாய்தாக்களாக போதிய கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தும், ஆனால் வழக்கின் விசாரணையை துவங்குவதற்கு வாதிகள் ஆஜரில்லாமலும், வாதிகளின் இத்தகைய செய்கையானது வாதிகளுக்கு வழக்கை நடத்துவதில் விருப்பம் இல்லாததைத் தெளிவாகக் காட்டுவதாக இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

1. பிராது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய பிரிவின்றி பாதி பாகத்தினை நட்பு, திட்பு பார்த்து பிரிவினை செய்து தனித்து ஒதுக்கீடு செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 7 பிரதிவாதிகளின் தந்தையுமான மாணிக்கராஜ் என்பவர் 13ம் பிரதிவாதிக்கு 22.12.1979 தேதியில் பிறப்பித்து கொடுத்த சாத்தான்குளம்

சார்பதிவக கிரைய ஆவண எண்.1932/1979 ஆவணமானது வாதிகளை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்யக்கேட்டும், 8 முதல் 12 பிரதிவாதிகளின் தந்தையுமான புஸ்பராஜ் என்பவர் 14ம் பிரதிவாதிக்கு 19.12.2007 தேதியில் பிறப்பித்து கொடுத்த சாத்தான்குளம் சார்பதிவக கிரைய ஆவண எண்.1629/2007 ஆவணமானது வாதிகளை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்யக்கேட்டும், இவ்வழக்கின் செலவுத் தொகையை வாதிகளுக்கு கிடைக்கும் படிக்கும், தீர்ப்பாணை பிறப்பிக்கக் கேட்டு, வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 16.02.2024 முதல், விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்த இவ்வழக்கானது, 25.06.2024 ஆகிய இன்று விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. ஏற்கனவே பல வாய்தாக்களாக போதிய கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் வழக்கின் விசாரணையை துவங்குவதற்கு வாதிகள் ஆஜரில்லை. வாதிகளின் இத்தகைய செய்கையானது வாதிகளுக்கு வழக்கை நடத்துவதில் விருப்பம் இல்லாததைக் காட்டுவதாக உள்ளது. ஆகையால் வழக்கானது வாதிகளின் வருகை தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd) P. Gopala Arasi, 25/06/2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

<u>வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–</u> இல்லை.

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–</u> இல்லை.

(Sd) P. Gopala Arasi, 25/06/2024

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மா.உ.நீ., சாத்தான்குளம்.
அ.வ.எண்.37/2021
வரைவு/நேரிய தீர்ப்புரை.
நாள்:– 25.06.2024.